விட்டு, இன்றைக்கு 19-ம் தேதி கொண்டு வருவது என்றால், அது விதிக்குப் புறம்பாக இருக்கிறது. அவர்கள் இந்த உரிமைப் பிரச்சினையை எழுப்ப விரும்பியிருந்தால், 10-ம் தேதி காலையில் கொண்டு வந்து கொடுத்திருக்க வேண்டும். அல்லது இரண்டொரு நாட்களிலாவது கொண்டு வந்திருக்க வேண்டும். ஆனால், இரண்டு மூன்று நாட்கள் பிந்தினால் கூட, அது பிந்திப் போய்விடுகிறது என்று தீர்ப்புகள் இருக்கின்றன.

மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கூறிய பதில் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு மனநிறைவு கொடுத்ததா இல்லையா என்று தெரியாது. விதிகளின்படி, ஆனால் 'earliest opportunity' யில் கொண்டுவரப்படவில்லை என்கின்ற காரணத்தால் பிந்திப் போய்விட்டது.

It is also not a matter of recent occurrence.

தங்களுக்கு (எதிர்க் கட்சித் தலைவரைப் பார்த்து) ஒன்று சொல்லுகிறேன். பட்ஜெட்டையும்விட, பேரவை உரிமைப் பிரச்சினை முந்துவது. பட்ஜெட் மிக முக்கியமானது என்பது எல்லோருக்கும் தெரியும். அது அரசுக்குப் பணம் கொடுக்க வேண்டிய அவசரம் உள்ளது. ஆனால், அதையும்விட மிக மிக முக்கியமானது, இந்தப் பேரவையின் மானம். இந்தப் பேரவையின் மானம் பெரியது. அதுபற்றி உடனடியாகச் சொல்லியாக வேண்டும் என்று விதி இருக்கிறது. அப்படிச் சொல்லவில்லை. ஆகையால், அவை கூடிய 10-ம் தேதியிலிருந்து இத்தனை நாட்கள் ஆனபிறகு, இந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என்று நான் கூறி, அதற்கு என்னுடைய சம்மதத்தைக் கொடுக்க மறுக்கிறேன்.

3. அறிவிப்புகள்.

(i) தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு பொது விற்பனைவரி (இரண்டாம் திருத்த) மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) மசோதாவை, இப்பேரவைமுன் அறிமுகப்படுத்தவும், இப்பேரவை அதை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைக் தெரிவித்திருக்கிறார்கள் என்பதை அவைக்கு அறிவிக்கிறேன்.

4. அரசினர் மசோதாக்கள்.

(i) தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) மசோதா.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) மசோதாவை இப்பேரவையின் முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு கே. ஏ. மதியழகன்: துணை அவைத்தலைவர் அவர்களே, நான் இந்த மசோதாவை அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மசோதா அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

5. 1967-68-ம் ஆண்டுக்கான கூடுதல் செலவிற்கான முதலாவது துணை நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு.

1. நிலவரித் துறை

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அவைத்தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்:—

"நிதிக் கோரிக்கை எண் 1—நிலவரித் துறை என்ற தலைப் பின் கீழ் ரூ. 93,700-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

நிதிக்கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப் பட்டது.

2. மோட்டார் வண்டிச் சட்டங்கள்—நிர்வாகம்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அவைத்தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்:—

"நிதிக் கோரிக்கை எண் 2—மோட்டார் வண்டிச் சட்டங்கள் —நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 49,400-க்கு மேற்படாத தொ கையை அரசுக்கு வழங்கவேண்டும்."

திரு. ஏ. அ. சுப்பராஜா: என் பெயரில் உள்ள வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழியவில்லை.

*** திரு. நா. காசிராமன்:** தலைவர் அவர்களே, இந்த "மோட் டார் வண்டிகள்—சட்டம்—நிர்வாகம்" என்னும் நிதிக் கோரிக்கை யின்மீது நான் ஒருசில வார்த்தைகள் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். மோட்டார் வாகனங்களுக்குச் செலுத்தப்படும் வரி இப்பொழுது ட்ரெஷரிகளிலும், ஸப்-ட்ரெஷரிகளிலும் செலுத்தப் படுகிறது. பொதுவாக, பஸ்களுக்கும் லாரிகளுக்கும் டாக்ஸிகளுக் கும் செலுத்தப்படவேண்டிய வரிகள், எவ்வளவு செலுத்தப்பட வேண்டும் என்று அந்தந்த ரீஜினல் ட்ரான்ஸ்போர்ட் ஆபீசர் அவர்களால் குறிப்பிடப்பட்டு, ஆங்காங்கு, அந்தந்தப் பகுதிக்குத் தகுந்தாற்போல், ட்ரெஷரிகளிலும், ஸப்-ட்ரெஷரிகளிலும் செலுத் தப்படுகிறது. பிறகு, அந்தந்த வண்டிகளில் உள்ள ரிஜிஸ்ட்